DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.2 MADURANTAKAM

Calender : CC 279/2024

Miscellaneous :

Sessions : PW 3

Deposition of Witness for

**எதிரிகள் ஆஜரில்லை எதிரிகள் தரப்பில் 355 BNSS ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

| | |
|---|---|
| Name | செல்வராஜ் |
| Father / Husband Name | தாந்தோணிபிள்ளை |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 13.**03.2025**

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது அண்டவாக்கம் கிராமத்தில் வசித்து வருகிறேன். சாட்சி பிரபுவை தெரியாது. என்னிடம் காட்டப்படும் சுப்ரமணி என்பவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் மற்றும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். ( **அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது கையொப்பம் அசாஆ 2 மற்றும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள முதலாவது கையொப்பம் அசாஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) தேதி மாதம் ஞாபகம் இல்லை. சுமார் 12 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் நான் பெட்ரோல் பங்கில் இருக்கும் போது போலிசார் என்னிடம் வந்து கையொப்பம் கேட்டார்கள். வழக்கு விவரங்கள் பற்றி தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசு தரப்பில் சாட்சி பிறழ் சாட்சியாக கருதப்பட்டு குறுக்கு விசாரணைக்கு அனுமதி கோரப்பட்டது அனுமதி அளிக்கப்பட்டது)**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

**2.** கடந்த 06.08.2013 ம் தேதி காலை 4.00 மணிக்கு நான் மற்றும் பிரபு என்பவரும் மலையனூர் சாலை டீக்கடைக்கு சென்றபோது போலிசார் எதிரி சுப்பிரமணி கைது செய்து விசாரித்தார்களா என்றால் இல்லை. எதிரி சுப்பிரமணி எங்கள் முன்னிலையில் போலிசாரிடம் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தாரா என்றால் இல்லை. அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் எதிரி சுப்பிரமணி மாமண்டூர் கல்யான மண்டபம் அருகே எடுத்து ஆஜர் செய்த பொருட்களை எங்கள் முன்னிலையில் போலிசார் கைப்பற்றி கைப்பற்றுதல் மகசர் தயார் செய்தார்கள் என்றாலும் அதில் நானும் பிரபுவும் கையொப்பம் செய்தோமா என்றால் இல்லை. தற்போது உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.2 MADURANTAKAM

Calender : CC 279/2024

Miscellaneous :

Sessions : PW 2

Deposition of Witness for

**எதிரிகள் ஆஜரில்லை எதிரிகள் தரப்பில் 355 BNSS ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

| | |
|---|---|
| Name | யோபுராஜா |
| Father / Husband Name | பணிமரியான் |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 13.03.2025

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது தபால்மேடு கிராமத்தில் வசித்து இரும்பு கடை வைத்துள்ளேன். சாட்சி ராஜ்குமாரை தெரியும். என்னிடம் காட்டப்படும் இரண்டு ஒப்புதல் வாக்குமூலங்கள் மற்றும் 6 கைப்பற்றுதல் மகசர்களில் உள்ள கையொப்பம் என்னுடையது அல்ல. வழக்கு விவரங்கள் பற்றி தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசு தரப்பில் சாட்சி பிறழ் சாட்சியாக கருதப்பட்டு குறுக்கு விசாரணைக்கு அனுமதி கோரப்பட்டது அனுமதி அளிக்கப்பட்டது)**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

**2.** கடந்த 04.07.2013 ம் தேதி காலை 6.00 மணிக்கு நான் ராஜ்குமார் கடைக்கு சென்ற போது புக்கத்துறை கூட்ரோடில் வைத்து போலிசார் எதிரிகள் சஞ்சைகாந்தி செந்தில் மற்றும் அஜித்குமார் ஆகியோர்களை கைது செய்து விசாரித்தார்களா என்றால் இல்லை. எதிரி சஞ்சைய் காந்தி மற்றும் செந்தில் ஆகியோர் எங்கள் முன்னிலையில் போலிசாரிடம் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார்களா என்றால் இல்லை. அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் எதிரி சஞ்சைய் காந்தி மற்றும் செந்தில் மாமண்டூர் கல்யான மண்டபம் அருகே எடுத்து ஆஜர் செய்த பொருட்களை எங்கள் முன்னிலையில் போலிசார் கைப்பற்றி கைப்பற்றுதல் மகசர் தயார் செய்தார்கள் என்றாலும் அதில் நானும் ராஜ்குமாரும் கையொப்பம் செய்தோமா என்றால் இல்லை. தற்போது உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.